CHILDREN'S AID SOCIETY of TORONTO

LA SOCIÉTÉ DE L'AIDE à L'ENFANCE DE TORONTO



# பிள்ளைகள் எப்படி மற்றும் ஏன் CAS பராமரிப்புக்குள் செல்கின்றார்கள்

பிள்ளையைத் துன்புறுத்தல் அல்லது புறக்கணித்தல் எனவும் அழைக்கப்படும், பிள்ளையைக் கொடுமைப்படுத்தல் பற்றிய தகவல்களைப் புலன்விசாரணை செய்யும் பொறுப்பு, ஒன்ராறியோவில் Children's aid societies (CAS)க்கு இருக்கின்றது. கனடாவில், பொதுவாக கொடுமைப்படுத்தப்படும் பிள்ளை என்பது, பெற்றோர் அல்லது பராமரிப்பாளரால் கொடுமைப்படுத்தப்படக்கூடிய ஆபத்தில் இருப்பதால் அல்லது கொடுமைப்படுத்தப்படுவதால் பாதுகாப்பு இல்லாமலிருக்கும் 16 வயதுக்குட்பட்ட இளைஞர் அனைவரையும் குறிக்கின்றது. இந்தச் சமூகத்திலுள்ள பிள்ளை ஒருவரது பாதுகாப்புப் பற்றிய அக்கறையுடன் தொடர்பான 120க்கும் அதிகமான அழைப்புகள், ஒவ்வொரு நாளும் எங்களுடைய நிறுவனத்துக்குக் கிடைக்கின்றன. பிள்ளை ஒருவரது பாதுகாப்புப் பற்றிய அழைப்புகள் பொதுவாகப் பின்வரும் பிரிவுகளுக்குள் அடங்குகின்றன: வீட்டு வன்முறையுடன் தொடர்பானவை (35%), உடல்ரீதியான, உணர்ச்சிரீதியான அல்லது பாலியல்ரீதியான கொடுமைப்படுத்தல் பற்றிய சந்தேகங்கள் (25%), அவர்களின் பிள்ளையைப் பராமரிக்கும் அவர்களுடைய திறனில் தலையிடும் போதைப் பொருள்/மதுவுக்கு அடிமையாதல் அல்லது மன ஆரோக்கியப் பிரச்சினைகளுடன் போராடும் பெற்றோர் (20%), பிள்ளையைப் புறக்கணித்தல் (15%), மற்றும் பெற்றோருக்கும் இளைஞருக்கும் இடையிலான முரண்பாட்டினால் அந்த இளைஞருக்கு அபாயம் ஏற்படல் அல்லது இளைஞர்களின் நடத்தைகள், அவர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்துவதால் பெற்றோரால் அந்த இளைஞர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாமை (5%). பிள்ளை அல்லது இளைஞர் ஒருவரின் சார்பில் அழைத்த அனைவருக்கும் நன்றி. பிள்ளை ஒன்றை முழுக் கிராமமுமே வளர்க்கின்றது, அந்தக் கிராமத்தின் முக்கியமான ஒரு பகுதியாக நீங்கள் இருக்கின்றீர்கள்.

புலன்விசாரணை ஒன்றில் முடிவடைகின்ற அழைப்புகளில் கிட்டத்தட்ட 80 சதவீதமானவை, ஆசிரியர்கள், காவல்துறையினர், மருத்துவர்கள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பகங்கள் (day cares) உள்ளடங்கலாக 'நிபுணர்கள்' இடமிருந்து CASக்கு வருகின்றன. மீதி 20 சதவீதம், பொதுவாக அயலவர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள் அல்லது அநாமதேயமானவர்களிடமிருந்து வருகின்றன. இந்த அழைப்புகளை மேற்கொள்வது நபர்களுக்கு சுலபமான விடயமல்ல என்பது எங்களுக்குத் தெரியும், ஆனால், ரொறன்ரோ பிரஜைகளும் நிபுணர்களும் அதன் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பற்றி மிகுந்த கரிசனையாக இருக்கின்றார்கள் என்பதை எங்களுக்குக் கிடைக்கும் இந்த அதிகளவிலான அழைப்புகள் எங்களுக்குக் கூறுகின்றன.

அழைப்பொன்று கிடைக்கும் போது, பிள்ளைகளின் நலனில் பயிற்சி பெற்ற நிபுணர்களால், குறைந்தது இருவரால் அது பரிசீலிக்கப்படுகின்றது. மாகாணரீதியாகத் தரப்படுத்தப்பட்ட ஒரு தொகுதி வரையறைகளைப் பாவித்து அவர்கள் செவிமடுப்பதுடன் குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்கின்றனர். பிள்ளையின் அபாய நிலையையும் பாதுகாப்புக்கான புலன்விசாரணை ஒன்று தேவையா என்பதையும் அவர்கள் தீர்மானிப்பதற்கு அது உதவுகின்றது. மதிப்பீடு செய்யப்பட்ட அபாயத்தின் பாரதூரத்தின் அடிப்படையில், அந்தப் பிள்ளை கொடுமைப்படுத்தப்பட்டிருந்தால் 'உடனடியான' புலன்விசாரணை (12 மணி நேரத்துக்குள்) எனவும் அல்லது கொடுமைப்படுத்தப்படக்கூடிய அபாயம் அந்தப் பிள்ளைக்கு இருந்தால், 7 நாட்களுக்குள் புலன்விசாரணை எனவும் அழைப்புகள் குறியிடப்படுகின்றன.

2014ல், ரொறன்ரோ CAS, 7,052 புலன்விசாரணைகளைப் பூர்த்திசெய்துள்ளது. கிட்டத்தட்ட 2,300, அல்லது 92 வகுப்பறைகளில் உள்ள பிள்ளைகளுக்குச் சமமான பிள்ளைகள், கொடுமைப்படுத்தப்படும் பிள்ளை அல்லது அவர்களுடைய பெற்றோரால் அல்லது பராமரிப்பாளரால் கொடுமைப்படுத்தப்படக்கூடிய அபாயத்திலுள்ள பிள்ளை என்ற வரைவிலக்கணத்துக்குள் அடங்கியிருப்பது அறியப்பட்டுள்ளது. CAS, தான் புலன்விசாரணை செய்யும் பிள்ளைகளில் பெரும்பாலானோரைத் தனது பராமரிப்புக்குள் கொண்டுவருகின்றது என்பதே பொதுமக்களின் புரிந்துணர்வாக இருக்கின்றது. உண்மை என்னவென்றால், ஒன்ராறியோவில், மிகக் குறைந்தளவிலான, 3 சதவீதமான பிள்ளைகளே பராமரிப்புக்குள் வருகின்றனர், Quebec இதற்கு விதிவிலக்காகவுள்ளது. CAS புலன்விசாரணை செய்யும் பிள்ளைகளில் 97 சதவீதமான பிள்ளைகள், அவர்களுடைய குடும்பத்தவருடனேயே தொடர்ந்தும் இருக்கின்றனர் என்பதே இதன் கருத்தாகும், அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக திட்டமொன்று உருவாக்கப்படுகின்றது. இந்த விடயத்தில் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு, அனைத்து CASம் நன்கு தொழிற்படுகின்றன. அத்துடன் இந்த வெற்றியின் முக்கியமானதொரு பங்காளராக பிள்ளையின் நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் இருக்கின்றனர். அந்தப் பிள்ளையைத் தெரிந்த, பேரன், பேத்திமார், மாமிமார், மாமாமார், மைத்துனர், மூத்த சகோதரர் (உறவினரின் (kinship) பராமரித்தல் என அழைக்கப்படும்), பயிற்றுவிப்பாளர்கள். ஆசிரியர்கள் மற்றும் அயலவர்கள் (அறிமுகமானவர்களின் (kith) பராமரித்தல் என அழைக்கப்படும்) போன்றவர்கள்தான், குறுகிய காலத்துக்கு அல்லது நீண்ட காலத்துக்கு அந்தப் பிள்ளைக்கான பராமரிப்பை வழங்குவதற்கு முன்வருகின்றனர். பிள்ளைகளையும் இளைஞர்களையும் அவர்களுடைய குடும்பத்தவருடன் அவர்களுடைய சமூகத்தில் நாங்கள் வைத்திருப்பதற்கு உதவுவதற்கு இவ்வகையான உறவினர் மற்றும் அறிமுகமானவர்களின் பராமரிப்பு ரொறன்ரோவில் எங்களுக்கு மிகவும் தேவையாகவுள்ளது.

CASன் பராமரிப்புக்குள் பிள்ளை ஒருவர் வர வேண்டியிருக்கும் போது, வளர்ப்புக் குடும்பங்கள் உள்ளடங்கலாக, குடும்ப அடிப்படையிலான பராமரிப்பே எப்போதும் விரும்பப்படும் தெரிவாக இருக்கின்றது. எங்களுடைய பிள்ளைகள் அவர்களுடைய குடும்பத்தவருடன் இருக்க முடியாதுள்ளபோது, அவர்களைப் பராமரிக்க உதவும் அந்தக் கிராமத்தின் மிக முக்கியமானதொரு பகுதியாக வளர்ப்புக் குடும்பங்கள் இருக்கின்றன. ரொறன்ரோவில் வளர்ப்புக் குடும்பங்களுக்கான பற்றாக்குறை இருக்கின்றது. எங்களுடைய பராமரிப்பில் இருக்கும் அதிகளவிலான இளைஞர்கள், இந்த நகருக்கு வெளியேயுள்ள வீடுகளில், அவர்களின் குடும்பங்களிலிருந்து, சமூகத்திலிருந்து, சில வேளைகளில் அவர்களுடைய கலாச்சாரத்திலிருந்து தூரத்தில் இருத்தப்படுவார்கள் என்பதே இதன் கருத்தாகும், ஏனெனில் வளர்ப்பு குடும்பமோ, உறவினர் அல்லது அறிமுகமானவர்களின் பராமரிப்புக்கான ஒழுங்கோ ரொறன்ரோவில் இல்லாமல் இருக்கின்றது. இது எங்களுக்கு விருப்பமான தீர்வல்ல. பராமரிப்பிலுள்ள ரொறன்ரோவின் பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் அவர்களுடைய கிராமம் தேவையாகவுள்ளது. தயவுசெய்து, ரொறன்ரோவில் பராமரிப்பிலுள்ள பிள்ளை ஒருவரின் ஒரு வளர்ப்புப் பெற்றாராக, அல்லது உறவினராகவுள்ள ஒரு பெற்றாராக அல்லது அறிமுகமான ஒரு பெற்றோராக வருவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.